543

tered No. M. 2095.

25 JAN 1927

# ஞானோதயம்.

[illegible] மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம், முதலிய
பல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 17 | 1927-வரு ஜனவரி-மீ 11உ | பகுதி 7

பொருளடக்கம்.


1. வஸந்தானந்தனம்—ச. ஸ்ரீனிவாசய்யங்கார் ... 167
2. தேவதாராதனை பகவதாராதனை:—திவ்யஞான தீபிகை —(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) ... 169
3. யுகம்—K. S. இராமஸ்வாமி அய்யர் ... 174
4. பிரம்மஞானசங்கம் தற்கால இந்தியாவுக்கு ஆவசீயகம் —மா. வெ. நெல்லையப்ப பிள்ளை ... 176
5. இன்ப அரசு—மா. வெ. நெல்லையப்ப பிள்ளை ... 180
6. திவ்யஞானஸாரம்—A. இராமஸ்வாமி சாஸ்திரிகள் ... 181
7. பிரமாண வாக்கியங்கள் ... 188
8. பத்திராதிபர் குறிப்புகள் ... 189
9. தியானக்கிரம விஷயம்—K. S. இராமச்சந்திரய்யர் ... 191


பத்திராதிபர்—V. இராமச்சந்திர நாயுடு, எனங்குடி,
தஞ்சாவூர் ஜில்லா.

சந்தா விபரம்:—

வருஷ சந்தா உள்நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0,
தனிப்பிரதி ரூ 0—2—0.

[illegible]ம் ஸ்ரீ இராமச்சந்திர அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

# பத்திராதிபர் விண்ணப்பம்.

நமது சந்தாநேயர்கள், வருஷ சந்தாவை முன் பணமாகச் செலுத்தியே பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு ஆதரித்து வருகிறார்களாயினும், பத்திரிகையை ஏற்றுக்கொண்டு ஆதரிக்கத்தக்கவர்களென்று எங்கள் மதிப்பிற்பட்ட சில கனவான்களுக்கு நாங்கள் சென்ற 6, 7 மாதங்களாகப் பத்திரிகை அனுப்பி வருகிறோம். அத்தகைய அபிமானிகளான நண்பர்கள் வருஷ சந்தாவாகிய ரூ. 1-ம் தயவு செய்து மணியார்டர் மூலமாய் அனுப்ப வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். வி. பி. அனுப்பினால் அவர்கள் பெற்றுக்கொள்ளத் தடையிராதென்று நாங்கள் அறிவோமாயினும், அநாவசியமாக அதற்கு 2 அணா அதிகம் செலவாகிறதை உத்தேசித்து அவ்விதம் கஷ்டப்படுத்த நாங்கள் சம்மதிக்கவில்லை. தயவுசெய்து சீக்கிரம் சந்தாவை அனுப்பி விடுவார்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

## நமது மாற்றுப் பத்திரிகைகளின் விளம்பரம்.


## புதுயுகம்.

இஃது, ஸ்ரீ ஜகத்குருவாம் பரமாசாரிய மூர்த்தியின் அவதார வருகையைப்பற்றி சென்ற 16 வருஷங்களாக உலகமெங்கும் பிரஸித்தப்படுத்தி அவர் நல்வரவை ஜனங்கள் அங்கீகரிக்கும்படி விசேஷப் பிரயத்தனங்களைச் செய்துவரும் உதயதிசை நக்ஷத்திர மஹாஸபையின் தமிழ் மாதாந்தப் பத்திரிகை. இதன் ஆசிரியர்: இராவ்ஸாகிப் சு. வி. கனகசபைப்பிள்ளை. வருஷ சந்தா ரூ. 1-8-0

E. N. வெங்கடபெருமாள் நாயுடு. B. A.
"புதுயுகம்" ஆபீஸ் கௌரவத் தலைவர்,
பென்ஷன் தாசில்தார், வளையற்காரத்தெரு, ஈரோடு.

---

## காமதேனு.

கிராம முன்னேற்றத்திற்குரிய முக்கிய விஷயங்கள், ஐக்கிய இயக்கம், கிராம பஞ்சாயத்துக்கள், விவசாயம், வியாபாரம், ஆரம்பக்கல்வி முதலிய விஷயங்களைப்பற்றிப் பரவச்செய்யும் ஓர் சிறந்த மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 1-8-0.

R. ஆநந்தராவ், "காமதேனு" பத்திராதிபர்.
திருத்தங்கல், சிவகாசி மார்க்கம்.

# ஞானோதயம்.

## பிரம்மஞான ஸித்தாந்தப் பத்திரிகை.

| தொகுதி 17 | 1927-ளு ஜனவரி-மீ 11உ | பகுதி 7 |
|---|---|---|

### * [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

* இஃது சென்ற அக்டோபர்மீ 1உ சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் அவர்களின் 80ம் ஜன்மதினக் கொண்டாட்டத்தில் அடையார் லைப்ரெரி பண்டிட் பிரம்மஸ்ரீ இராமநாத சாஸ்திரியார் அவர்களால் பாடப்பட்டது.

இதி ஸ்ரீகவிவர: ஸ்ரீகாஷிராமோபாத்யாய:। தத்விரசித
தய்யம் ஸாஸநேதே வஸிஷ்ட ஜயஜய ஸம்ப்ரதாயேப்ய ஸ்வா
தேதேவ்யவஸம்தே ।।

ஸ்ரீராமாநுஜ ஸம்ப்ரதாயாமு ஸம்மித: ஸ்ரீதிநாவ்ய
வதாம்ப்ர ராமாநுஜ: ஸ்ரீவஸந்தாநந்தம் ஸம்ஸ்ய ।।

# ஸ்ரீ வசந்தாநந்தம்.

கார்கோள் மேகலை கவினுற வுடீஇய
பார்மீ தோங்கும் பாரதப் புதல்வி!
இளப்பரும் பெரும்புக ழளப்பி லொளியே!
சிந்தா துதவுநற் சிந்தா மணியே!
பாரதத் தாயின் சீரதை யுயர்த்தப்
பானுட் டங்குலு மானு துழைக்கும்
பாக்கியச் செல்வர்மு னீக்கரு நிதியே!
தாவா விழுநலந் தோய்மாண் புலவர்ச்
சகோரங் கட்கோர் சிநாமதி யாகுவை,
பிரம ஞானமாந் தாமிகு மத்திவை
விளக்க வுதித்த துளக்கில் விதுவாச்
சீர்மலி நிலக்குச் சேம மூன்றும்
போர்மலி தாருவிற் பிறழ்கொடி மானுவை,
தங்குறை நீக்கஞ் சிந்தியா ரிடுக்கண்
தவிர்த்தலிற் றீக்கிதர் புவித்தனிப் பெரியா
ரென்பதற் குப்பே ரிலக்கிய மொன்ன
இந்துவை மீட்டும் நந்த வொத்தியா
லுலக மேம்பா டுலவுதற் கொள்கையி
னுன்னை மறந்தா யுன்றன் பெண்ணு
மென்பதை முறையிடு நன்குநின் சரித
மதனல் மதுகை யடைகநின் பூட்கை
வீடாக் கருமத்து நாடா முயற்சி,
ஈசன் முறையைத் தேசுறத் திருத்திய
வசந்தை நாம மாதே சகந்தன்
சேவை யுரித்தெனச் சிக்கெனப் பூண்டு
கோவை யுவக்க குலவிநின் வாணுள்
பல்குக தில்ல மல்குக புகழே.

ஸ்ரீகாழி,
7—11—26

ச. ஸ்ரீநிவாச ஐயங்கார், B. A.
வித்துவான்.

2/1881

# தேவதாராதனம்: பகவதாராதனம்.

அடையாற்றில் அமைக்கப்பட்டிருக்கும் ஹிந்து தேவாலயத்தில் நடந்துவரும் நித்திய பூஜையைக்குறித்து சென்ற சஞ்சிகைகளில் சிறிது வரைந்திருக்கிறோமல்லவா? அப்பூஜையின் முறைமையைக் கண்ணுற்ற ஒருவர் அம்முறையைக் குறித்துச் சில சந்தேகங்களையும் ஆக்ஷேபனைகளையும் சூசிப்பித்து ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார். செய்யப்படும் ஆக்ஷேபனைகளுக்கெல்லாம் விடையளித்தல் எங்கள் கடமையல்லவாயினும், அதிலுள்ள சம்சயங்களிற் சில, ஜிக்ஞாசுக்களான மற்றவர்களுக்கும் ஏற்பட்டிருக்குமாகையால் அவைகளுக்கு எங்களுக்குத் தோன்றிய ஸமாதானங்களை இங்கு வெளியிட முன்வந்தோம்.

1. "ஹிந்துக்களில் த்விஜர்கள் மாத்திரம் வேதத்தைப் படித்து சந்தியாவந்தனம், சூர்யோபாசனை, தேவதார்ச்சனை, அக்கினி உபாஸனை முதலியவைகளுக்கு, வெவ்வேறு காலங்களை நியமித்து அவைகளை அனுஷ்டித்துக்கொண்டு வந்திருக்க, அங்கு சகல ஜாதியார்களும் கலந்து, ஸர்வமதஸதோபாஸனை மந்திரங்களை ஏககாலத்தில் பாராயணஞ்செய்தல் முதலியவை ஏற்பட்டிருக்கின்றன. நமது பூர்வீகர்கள் ...... அக்கினி, சூர்ய, வருண உபாஸனைகளுக்கு வெவ்வேறு காலங்கள் விதித்திருக்க, கலியாதி இதுவரைக்கும் பூர்வீகர்கள் அனுஷ்டித்த மார்க்கத்தை விட்டொழித்து, ஸர்வ ஜனங்களும் ஸோதரபாவமென்ற வியாசத்தால் ஸர்வமந்திரங்களை ஏககாலத்தில் சந்தஸ் சொல்லும் விதம் பாராயணம் செய்தலுக்கு ஞாயமென்ன?" என்று அந்நிருபர் ஆக்ஷேபித்திருக்கின்றார்.

த்விஜர்கள் மாத்திரம் வேத மந்திரங்களை படனம் செய்யும்படி பூர்வீகர்கள் நியமித்தார்களெனவும், இதரர்கள் படனஞ் செய்யப்படாதெனவும் ஆக்ஷேபிக்கின்றார். அவ்விதமிருக்கலாம். அவ்விதம் விதித்தவர்கள் எவரோ, அவ்விதம் விதித்தலுக்கு அவருக்கு எவ்வளவு அதிகாரமோ இவைகளை விசாரித்தல் துர்லபம். ஆனாலும் த்விஜர்களெனப்படுவோர் யாவர், என்னும் பிரச்னை விசாரிக்கத்தக்கது. பிராஹ்மண, க்ஷத்திரிய, வைசியர்கள்

* தெலுங்கு திவ்வியஞானதீபிகையிலிருந்து பத்திராதிப்பரால் மொழி பெயர்க்கப்பட்டது.

த்விஜர்களென எல்லோரும் சுலபமாகவே சொல்வார்களன்றோ! இவர்கள் யாவரென விசாரிப்போம். கிருஷ்ண த்வைபாயன வியாசர் இக்காலத்தவர்களின் அபிப்பிராயத்தை யொட்டி த்விஜர்களில் சேர்ந்தவர்தானா? உபநிஷத்துக்களில் ப்ரஸித்தரான ஸத்தியகாம, ஜாபலி முதலானவர்கள், அவர்களது ஆஸ்திக்யம், அவர்களது ஜிக்ஞாஸத்வம், ஞானம், பக்தி, ஸாத்வீகஸ்வபாவம் இவைகள் எவ்வளவு விசேஷமாக இருந்தாலும், இக்காலத்தில் த்விஜர்களாக எண்ணப்படுவார்களா? இது இவ்வாறிருக்க,

"சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகச:"

(இ-ள்) நாலுவர்ணங்களும் என்னால் குணங்கள் கர்மங்கள் இவைகளின் பிரிவுகளுக்குத் தக்கபடி உண்டாக்கப்பட்டன.

எனும் கீதா வாக்கியத்தில் 'குணகர்மவிபாகச:' என்ற பாகத்திற்கு "ஜன்மத்தால்" என்றே அர்த்தம் செய்யவேண்டுமா? மேலும் ஸ்ரீமத் பாகவதாதி கிரந்தங்களிலுள்ள,

ந சூத்ரா பகவத்பக்தா: விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா:।

(இ-ள்) ஈசுவரனிடத்தில் பக்தியுள்ளவர்கள் சூத்திரர் அல்ல. ஈசுவரபக்தியுள்ளவர்கள் (அதாவது) பாகவதர்கள் பிராமணர்கள் என்று ஸ்மிருதி கூறுகிறது.

இத்யாதி வாக்கியங்கள் பிரயோஜன மற்றவைகளா, அனாத்த முள்ளவைகளா அல்லது கலியின் கூத்தா?

இவ்விஷயங்களை யெல்லாம் மனனம் செய்யவேண்டும். இவ்விதம் கொஞ்சமேனும் விசாரியாமல், பெரியோர் யாரோ சொன்னாரென ஒருவர் சொல்லுவதும், ஏனையோர்கள் குருடர்களைப் போல் அதை அங்கீகரித்து அனுசரித்தலும், சில சகாப்தங்களுக்கு முன் உபயோகமுள்ளதாய் இருந்ததோ என்னமோ, சாத்தியமாக இருந்ததோ என்னமோ, இக்காலத்தில் சாத்தியமற்றதென் ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது.

"யுகதர்மங்கள்" என்ற வியாசத்தில் நான் குறிப்பித்தபடி கலியுகதர்மம்—அதாவது ஸாமான்யஜனங்களின் ஸ்வபாவம்—வேறு விவாதம். ஒவ்வொரு விஷயத்தையும் விசாரித்து, காரணத்தோடு



கூடியிருக்கின்றதா, யுக்தியோடு கூடியிருக்கின்றதா என யோசித்துக் கிரஹிப்பதாகின்றது. இது ஈசுவர சங்கற்பத்தை அனுசரித்ததேயொழிய அதற்கு முரணன்று. ஆனதால் பெரியோர்கள், பூர்வீகர்கள் எழுதியுள்ள விஷயங்களைச் சாங்கோபாங்கமாய்ப் பரிசீலிப்பதும், அதிற்சில பரஸ்பரம் முரணாயிருக்கின், ஸ்வயுக்தியை விநியோகித்து, எது பரஸ்பர பிரேமை பாவங்களுக்கும், ஐக்கியமத்தியத்திற்கும் அனுகூலமாக இருக்குமோ அதை கிரஹிப்பதும், பின்ன பாவங்களுக்கும், த்வேஷங்களுக்கும் காரணங்களாக இருப்பவற்றைத் தவிர்த்தலும் நல்ல ஞானமென எங்களிற் சிலரது அபிப்பிராயம்

மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் பகவத்கீதையில் அர்ஜுனனுக்கு போதித்த,

வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்தினி।
சுநி சைவ ச்வபாகே ச பண்டிதா: ஸமதர்சின:॥

(இ-ள்) கல்வி, வணக்கம் இதுகளுடன் கூடிய பிராம்மணன், பசு, யானை, நாய், சண்டாளன் இவர்கள் எல்லோரையும் ஞானிகள் சமமாக பாவிப்பார்கள்.

விஸ்ருஜ்ய ஸ்மயமாநாந் ஸ்வாந் த்ருசம் வ்ரீடாம் ச தைஹிகீம்।
ப்ரணமேத் தண்டவத் பூமாவாச்வசண்டாளகோகரம்॥

(இ-ள்) கர்வங்கொண்ட மித்ரர்களையும் தேகத்தைச்சார்ந்த வெட்கத்தையும் விட்டு நாய், சண்டாளன், கழுதை முதலிய எல்லாப் பிராணிகளிடம் ஈசுவரன் ஜீவர்களோடுடன் பிரவேசித்திருக்கிறான் என்று எண்ணி பூமியில் தடிக்கம்புபோல் நமஸ்கரிக்கவேண்டும்.

என்ற வாக்கியங்களையும் ஸ்ரீகபிலர் தேவஹூதிக்குப் போதித்த "ஸஹ்யேத தாநமாநாப்யாம் மைத்ர்யா அபிந்நேந சக்ஷுஷா"

(இ-ள்) தானத்தாலும் மானத்தாலும் மைத்திரத்தன்மையுடனும் பேதமில்லாத திருஷ்டியுடனும் பூஜிக்கவேண்டும்.

முதலாயுள்ள மஹத்வாக்கியங்களையும் நாமெல்லோரும் தீர்க்கமாய் ஆலோசித்து மனனஞ்செய்து, அஹங்கார மமகாரங்களை ஒழி

த்து, ஸ்வலாபபுத்தி நீங்கிய "தர்ம காமமுள்ளவர்களாகி" உலக் க்ஷேமத்தின்பொருட்டு, ஸர்வமானவ ஸோதரபாவம் வியாபிப்பதற்காகப் பாடுபடுதல் எந்த மஹான்களான ரிஷிகளுடையவும்அவதார புருஷர்களுடையவும் மதம். ஆகையால் இவையெல்லாம் கலியின் கூத்து என தூஷிப்பவர்களெல்லாம் "𑌕𑌲𑌿𑌸𑌾𑌰𑌃" (கலிசாது) என்னும் மஹத்வாக்கியத்தைக்கூட மனனம் செய்வார்களாக.

மேல்வரைந்த விஷயங்களினின்று மேல் ஆக்ஷேபனைக்குச் சமாதானம் ஏற்படலாம்.

அடையார் தேவாலயத்தில் பூஜைக்கு வருபவர்கள், ஆஹார நியமம் உடையவர்களாகி, வேண்டியமட்டில் ராஜஸ தாமஸ ஆகாரங்களை வர்ஜித்து, பக்தி சிரத்தையுடன் கூடினவர்களாகி, இந்திரிய மனோ நிக்கிரஹங்களை அப்பியசித்துக்கொண்டு, சூர்ய உதயத்திற்கு முன்னர் ஸ்நாநம் முதலிய கிரியைகளை முடித்து, குளிர் என்றும் மழை யென்றும் பாராமல் உதயம் ஆறரை மணிக்குள் ஆலயத்திற்கு வந்து பூஜைக்கு ஸித்தமாக இருப்பவர்கள். த்விஜர்களென அழைக்கப்படுபவர்களில் எத்தனைபேர் இந்த நியமங்களை அனுசரிக்கின்றார்களென யோஜிக்கத்தகும். இவர்களிடம் ஜாதி மத வைஷம்யங்களாகட்டும் தாழ்வு உயர்வு என்ற பாவங்களாகட்டும் காணப்படா.

கிருஷி வர்த்தகம் பசுஸம்ரக்ஷணை முதலியவை வைசியதர்மங்களென்றும், இம் மூவகைப் பாகுபாடுகளை யனுசரித்து, வைசியர்கள் — பூவைசியர்கள், தனவைசியர்கள், கோவைசியர்கள், என வகுக்கப்பட்டார்களெனவும் கேள்விப்பட்டிருக்கின்றோம். இதனிடம் எவ்வளவு பிரமாண முளதோ தெரியாது. இப்போதைய சூத்திரர்களெனப்படுபவரெல்லோரும் வைசியர்களோ என்னமோ? குணகர்மங்களை யொட்டி அவரென்னமோ வைசியர்களே. மேலும் வைசியர்களுக்கே வேதத்தி லதிகாரமில்லையென வாதிப்பவர்களுக்குப் பிரமாணமெதுவோ ஆகட்டும். இவ்விதம் பண்டிதர்கள் வாதிக்கின்றார்களல்லவா?

இரண்டாவது விஷயம். அக்கினி, சூர்ய, வருண உபாஸனைகளுக்குக் காலநியமம் விதிக்கப்பட்டு இருக்கிறதாம்:—எவ்வி



தமோ எங்கோ எனக்குத்தெரியாது. ஸந்தியாவந்தனத்தில் அந்தந்தக் காலத்தில் சில மந்திரங்களை உபயோகிக்கும் காரணங்களைப்பற்றி, அம்மந்திரங்கள் இன்னும் எக்காலத்திலாகட்டும், எப்பிரகரணத்திலாகட்டும் உபயோகிக்கக் கூடாதென்ற ஸம்பிரதாயத்தை அறியாதவர்கள் சொல்வதாகும். சாஸ்திரீயமென்றாகட்டும், சிஷ்டாசாரமென்றாகட்டும் சொல்வதற்குச் சாத்தியப்படமாட்டாது.

காலை மாலை நேரங்களில் அக்கினி உபாஸனை செய்கின்றார்களல்லவா? காலையிலும் மத்தியானத்திலும் மாலையிலும் கூட "சூர்ய உபஸ்தானத்தை" சொல்லுகின்றார்களல்லவா? காலையில் "புண்ணியாஹவசனம்", "உதகசாந்தி" மத்தியானத்தில் தேவதார்ச்சனைக்குத் தீர்த்தஸ்வீகாரம் இவை முதலாயுள்ள ஸமயங்களில் வருணதேவதை பிரஸன்னமாகக் கூடிய மந்திரங்கள் உபயோகித்தலை அறியார்களா? எதுவோ சில சுவல்ப விஷயங்களை ஒட்டி, ஓரோர் ஆசாரத்தைக் கைப்பற்றி அதுவே ஸனாதன தர்மமென்றும், அதற்கு எதிரிடையாக உள்ளவைகளெல்லாம் அனாசாரங்கள், துராசாரங்களென்றும் நினைத்தல் சரியான சமாதானமாக மாட்டாதென வினய பூர்வகமாய் விண்ணப்பம் செய்துகொள்கிறோம்.

மற்றொரு சின்ன விஷயத்துடன் இப்பிரகரணத்தை முடிக்கின்றேன். உபாஸனை தத்வத்தில் ஒரு ரகசியம். எந்த ரூபத்தையும், எந்த பிம்பத்தையும் எந்த தேவதையின் நாமத்தால் பூசிக்கினும், உபாசிக்கப்படும் தெய்வம் ஏகமும் அத்விதியமுமான பரமேசுவரனே. எந்த தெய்வத்தையேனும் பேதமாக நினைத்து, பிரத்யேகமாய் உபாசித்தல், ஸ்ரீ கீதாச்சாரியார் உபதேசித்த பிரகாரம்:—

𑌕𑌾𑌮𑍈𑌸𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍈𑌰𑍍𑌹𑍃𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 । 𑌤𑌂 𑌤𑌂 𑌨𑌿𑌯𑌮𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌨𑌿𑌯𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌾 ॥

(இ-ள்) அந்தந்த ஆசைகளால் அறிவு அபகரிக்கப்பட்டவர்கள் அந்தந்த நியமத்தைக் கைப்பற்றி, தம்முடைய இயற்கையினாலே நியமிக்கப்பட்டவராய், வேறு தெய்வங்களை அடைகிறார்கள்.

காம்யமாகும் அவ்வித உபாசனைகளிலேயே அந்த நியம விதிகளை ஒழிய, எல்லா தேவதைகளிடத்தும், ஸர்வபூதங்களிடத்தும் எல்லா அர்ச்சாதிகளிடத்தும், பிம்பங்களிடத்தும் அந்தர்யாமியாகவுள்ள ஆன்ம ஸ்வரூபனான பரமேசுவரனுடைய ஆராதனையில் உபாசிக்கப்படும் தெய்வம் ஒன்றே.

இவ்விஷயத்தை சென்ற சஞ்சிகைகளில் நான் எழுதிய வியாஸத்தில் விஸ்தாரமாய் நிரூபித்திருக்கின்றேன்,

ஸி. ராமய்யா.

## யுகம்.

'யுகம்' என்றால் சேர்க்கை என்னும் பொருள்கொடுக்கும் பதம். 'யோகம்' என்றாலும் சேர்க்கை என்று அருத்தம். 'யுகம்' காலத்தின் அதாவது கடவுளின் சேர்க்கை. 'யோகம்' தேசத்தின் அதாவது ப்ரகிருதியின் சேர்க்கை. சகுணப்பிரமமாகிய ஈசுவரனுடைய கால வரையைத்தான் தீர்க்கதரிசிகள் கணக்கிட்டு, கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று பிரித்துக் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகவே ஈசுவரன் "காலோஸ்மி" என்று சொன்னபடி காலமாக இருக்கிறான். ப்ரகிருதி தேசமாக இருக்கிறது. ஆகவே இவையிரண்டும் பிரிக்கமுடியாத சாசுவதம்.

"சீவனெனச் சிவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலார்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாயிட்டிருப்பரே"

என்றபடி விதையாயிருக்கிற நாம், ஸ்தூல ப்ரக்ஞையிலிருந்து நமது 'கலி' என்னும் சாதுவோடும், சூக்ஷ்ம ப்ரக்ஞையிலிருந்து நமது 'துவாபர' என்னும் 'தைஜஸனோடும்' காரண ப்ரக்ஞையிலிருந்து நமது 'திரேதா' என்னும் வைசுவானரனோடும், துரீய ப்ரக்ஞையிலிருந்து 'கிருத' என்னும் ப்ராக்ஞனோடும் நாடிச் சேரவேணும். இதைக்கொஞ்சம் ஆழ்ந்து கவனிப்பவர்கள் நமது ஸ்தூல ப்ரக்ஞைதான் நமக்குத் தனித்தனியான கலியுகம் என்றும் சூக்ஷ்ம ப்ரக்ஞைதான் 'துவாபரம்' என்றும், காரண ப்ரக்ஞைதான் 'திரேதா' என்றும் துரீய ப்ரக்ஞைதான் கிருத யுகமென்றும் ஊகிக்கலாம்.



"யாவாநர்த² உத³பாநே ஸர்வத꞉ ஸம்ப்லுதோத³கே ।
தாவாந் ஸர்வேஷு வேதே³ஷு ப்³ராஹ்மணஸ்ய விஜாநத꞉ ॥"

(இ-ள்) (கிணறு முதலிய) நீர் நிலையில் எவ்வளவு உபயோகமுள்ளதோ அவ்வளவு (உபயோகமும்) எங்கும் பெருகிய நீர்ப் பெருக்கில் உள்ளது. (அதுபோல) சகல வேதங்களிலும் (எவ்வளவு ப்ரயோஜனமுள்ளதோ அவ்வளவு ப்ரயோஜனமும்) ஞானியான பிராமணனுக்கு (ப்ரம்மாநந்தத்திலுள்ளது).

என்ற கீதாசாரியன் அபிப்பிராயம் தெரிந்தவர்களுக்கு "The proof of pudding is in its eating" என்றபடி அவரவர் அவரவர்களுடைய அந்தந்த யுகத்தில் நம்பிக்கையோடும் உண்மையோடும் வேற்றுமைப் புத்தியேயில்லாமல் ஈசுவரார்ப்பணமாய் உழைக்கிறதற்குத் தக்கபடிதான் அவர்களுக்குக் காலம் "பிறந்த" காலம் என்னும் 'யுகம்' ஆகும். மற்றவர்களுக்கெல்லாம் "பிறவாகாளே" ஆகும். இதனால் பெரியோர்கள் சிலர் "எங்களுக்கெல்லாம் ஜகத்குரு ஏற்கனவே வந்துவிட்டார். இன்னம் ஆஸ்திக புத்தியைப் பலபான்மையிலும் விருத்திபண்ணி, விரோத புத்தியை விலக்கினால் நீங்களும்இப்பொழுது வரும் ஜகத்குருவின் அனுக்கிரகம் பெறலாம்" என்று உதயதிசை நக்ஷத்திர சங்கமூலமாய் 1911-ம் வருஷம் முதல் உலகினரெல்லாம் உய்யவேணும் என்னும் கருணையால் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஆகவே "யதா³ யதா³ ஹி த⁴ர்மஸ்ய க்³லாநிர்ப⁴வதி பா⁴ரத ।
அப்⁴யுத்தா²நமத⁴ர்மஸ்ய ததா³த்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥"

(இ-ள்) எப்பொழுது தர்மத்திற்கு குறைவும் அப்படியே அதர்மத்திற்கு விருத்தியும் ஏற்ப்படுகிறதோ அப்பொழுது நான் என்னையே சிருஷ்டிசெய்து கொள்கிறேன்.

என்னும் அருள்வாக்கைக் கௌரவிக்கிறவர்கள் இவ்வரவை இன்னார் பிரசாரம் செய்கிறார்கள் என்பதனால் இகழார்கள். "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றபடி தங்கள் அறிவினால் உண்மையை நாடி "இதுதான் அக்காலமோ" என்று அசட்டுத்தனமாய் இகழாமல் "ததே³வ லக்³நம் ஸுதி³நம் ததே³வ" (அதுவே லக்னம், அதுவே

சுதினம்) என்ற சங்கல்ட்த்தை உண்மையாகச் செய்துகொண்டு எல்லோரும் உய்யுமாறு உண்மையோடும் அன்போடும் புலை, புகை, குடி, விபசாரம் முதலிய பாதகத் தொழில்களை நீக்கி சகோதர பாவனையைச்சார்ந்து உய்வார்களாக.

K. S. இராமஸ்வாமி அய்யர்.

குறிப்பு:—துரீயம், சுழுத்தி, சொப்னம் இப்பொழுது ஒருவாறு விவேகிகளுக்கு சாதாரணமாய் ஒன்றிலிருக்கிறது. அவர்கள் தமக்குத்தானே உண்மையாளர்களாயும் அன்பாளர்களாயும் இருந்தால் ஸ்தூல ப்ரக்ஞையும் அவைகளோடு சேர்ந்து ஆனந்தம் அனுபவிக்கும் சமயம் இது.

---

# பிரமஞ்ஞான சங்கம் தற்கால இந்தியாவுக்கு ஆவசியகம்.

(149-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சாதிக்கொடுமை இந்திய நாட்டின் மக்கள் நலத்துக்குத் தடையாயிருக்கிறது என்றும், பிரமஞ்ஞான சங்கம் செய்த வேலையின் பயனாக அந்தச் சாதிக்கொடுமை ஒருவாறு குறைந்து வருகிறது என்றும் முன் எழுதிய கட்டுரையில் பொதுவாகக் கூறினேன். சாதிக்கொடுமை குறைகிறதற்குப் பிரமஞ்ஞான சங்கம் எவ்வாறு வேலைசெய்து வருகிறது என்பதைப்பற்றிக் கொஞ்சம் விரிவாய்க் கூறல் இக்கட்டுரையின் கருத்தாம்.

2 சாதி என்பது பிறப்பு-சாதிக்கொடுமை என்பது கடவுட்பற்று, அறிவு, அன்பு, ஒப்புரவு முதலிய நற்குணங்கள் காரணமாக அல்லாமல், பிறப்புக்காரணமாக மாத்திரம் தற்காலம் இந்து மக்களுக்குள் நடைபெற்று வருகிற வகுப்புகளினால் ஒருவருக்கு ஒருவர் மன வேற்றுமையுடையவர்களாய் பகைமை கொண்டு ஒழுகும் ஒழுக்கத்தாலுண்டாகும் தீமையாகும். சாதிக்கொடுமை இந்தியாவில் உளது என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஒரு வகுப்பாருக்கும் மற்றொருவகுப்பாருக்கும் நாம் கண் கூடாகக் காணும்படி இந்தியா நாட்டில் நேரிடுகிற சண்டை சச்சரவுகளும், விவாதப் பேச்சுகளும், நீதிமன்று (கோர்ட்டு) வழக்குகளும் அதற்



இனி சிஷ்யனாக வரப்போகிறவன் அதோ இருக்கிறானென்று தெரிந்துகொள்கிறார் ........ சன்மார்க்க முறையை அனுஷ்டிப்பதற்கு இந்த அன்பைத்தவிர வேறுவழியில்லை.

குருநாதர்களும் அவர்களை யடையு மார்க்கமும்.

25வ. சன்மார்க்க முறையில் பிரவேசிக்க முயல்பவனின் லக்ஷணம் யாதெனக் கூறுகின்றேன். சுயநலமற்று பிறர்க்குக் கைங்கரியம் செய்வதில் தீவிரமான அவா வுள்ளவனாக விருப்பான். மற்றவர்களுடைய நன்மைக்காக தன்னுடைய எல்லா உடைமையையும் தியாகம் செய்வதில் சித்தனாயிருப்பான். உலகத்தார் அதிகமாய் மதிக்கும் எல்லாவற்றையும் தனக்கு நியாயமென்று தோன்றும் காரியத்தின் நிமித்தம் அர்ப்பணம் செய்யத் தயாராயிருப்பான்.

குருநாதர்களும் அவர்களை யடையும் மார்க்கமும்.

26வ. இச்சன்மார்க்கத்தில் முதலில் அதன் லக்ஷியம் அல்லது எல்லையாவது என்னவெனில், முழு பிரக்ஞையுடனே ஈசுவரனுடன் கலத்தலேயாம். ஈசுவரனை ஸ்துதி பண்ணுதல் அல்லது ஈசுவரனுடன் கலக்க வேண்டுமென்ற அவா வுறுதல்மட்டும் போதாது. ஞானியானவன் ஓரோர் சமயம் மெய்ம்மறந்து இருக்கின்ற நிலைமைமாத்திரம் போதாது. ஆனால் பரமாத்ம ஸாக்ஷாத்காரம் என்ற அகண்டாகார விர்த்தியாகிய உயர்ந்த அனுபவம் வரும்வரை படிப்படியாய்த் தன் பிரக்ஞையானது மென்மேலும் அகன்று விரிந்துவர வேண்டியது.

குருநாதர்களும் அவர்களை யடையும் மார்க்கமும்.

27வ. ஜீவன் முக்தரான குருநாதன் தெய்வத்தன்மையடைந்த மனிதரே. ஓர் மூத்த சகோதரர் போன்றவர். மற்ற மனிதரைப்போல் அவரும் மனிதரேயாயினும் அவர் விகாசமுறையில் அடைந்திருக்கும் உன்னத பதவியினால் மூத்தவராவர். சன்மார்க்கத்தில் அவர் வெகுதூரம் நடைபெற்றவர். அனேக ஞானதீக்ஷைகள் பெற்றதினால் அவரு

நலத்தைச் சார்ந்ததல்ல. அதன் கிளைகள் இந்தியாவில் பல இடங்களில் இல்லாததினால் அதன் வேலையும் மிகக் கொஞ்சமே.

6 சாதிக்கொடுமைக்கு அடிப்படையான காரணம் அறியாமை. உண்மையான சாதிப்பிரிவினைக்கு ஆதாரமாயுள்ள உண்மைகளை அறியாமையும், அதுபற்றி தற்காலத்திலுள்ள எண்ணிறந்த போலி சாதிப்பிரிவினைகளினால் உண்டாகும் கேட்டினை அறியாமையும் சாதிக்கொடுமைக்கு முக்கிய காரணம். இந்த அறியாமை காரணமாக ஒரு சாதி உயர்ந்தது ஒரு சாதி தாழ்ந்தது என்னும் கருத்து இந்திய நாட்டில் இந்துக்களுக்குள் பரவி அக்கருத்துக்கு நீண்டகால வழக்கத்தினால் அவர்கள் அடிமைப்பட்டிருந்தார்கள். சாதிக்கொடுமையைச் செய்கிற ‘மேற்சாதியார்களும்” சாதிக்கொடுமைக்கு உட்பட்டு நடக்கிற “கீழ்ச்சாதியார்களும்” அடிமைப்பட்டிருந்தார்கள். அறியாமை பரவியிருந்த பொழுது “மேற்சாதியார்கள்” “கீழ்ச் சாதியார்களை” தங்கள் சொந்த நலத்தின் பொருட்டு பலவாறாய் ஆட்சி செய்துகொண்டிருந்தார்கள். இது இயற்கைக்கு மாறான நிலைமை. இந்த நிலைமையில் இருதிறத்து மக்களுடைய முன்னேற்றமும் தடைப்படும். ஆங்கிலேயர்களுடைய அரசியல் இந்தியாவுக்கு வந்து ஏறக்குறைய நூறு ஆண்டுகள் ஆயினபின் மேற்சாதியார்களுடைய ஆதிக்கம்குறையத் தொடங்கியது. “கீழ்ச்சாதியார்கள்” தாங்கள் உலக வாழ்வில் முன்னேற்றம் அடைகிறதற்கு வேண்டிய முறைமைகளை அனுசரித்து நடக்கத் தங்களுக்கு உரிமையுண்டு என்றும், அந்த உரிமையைத் தடைசெய்ய யாருக்கும் அதிகாரம் இல்லை என்றும் அறிந்து, சாதிக் கட்டுபாட்டு வழக்கத்தினின்றும் சுவாதீனம் அடைய முயன்றுவந்தார்கள். இவ்வாறு பல சாதி வகுப்பினர்கள் தங்கள் தங்களால் இயன்றவரை பழைய வழக்கத்துக்கு மாறான வழியில் நடந்தபொழுது, அவர்களுள் ஒருவருக்கொருவர் மன வேற்றுமைகளும் கலகங்களும் உண்டாயின. அதிகாரவர்க்கத்தினர்கள் ஜனங்கள் கலகம் செய்துகொண்டால் அதனைத் தடுக்கவும், கலகத்தில் ஒருவரை யொருவர் துன்பமுதலியன செய்தால் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைத் தண்டிக்கவும் வல்லவர்களே அல்லாமல், மனவேற்றுமைக்கும் கலகத்துக்கும் ஆதாரமாயுள்ள காரணம் இன்னது என்று ஆராய்ந்து அறிந்து அதனை நீக்க வல்லவர்கள் அல்லர்.



7 இத்தருணத்தில் இந்திய நாட்டில் பல இடங்களில் பிரமஞ்ஞான சங்கக்கிளைகள் நிறுவப்பட்டன. அவைகளின் அங்கத்தினர்கள் “உயிர்களுக்கெல்லாம் கடவுள் தந்தைதாய் ஆதலின் அவைகள் ஒருவருக்கொருவர் சகோதரர்கள்” என்ற உண்மையைக் கூடியவரை அறிந்து ஒழுகிவந்தார்கள். அதனை ஜனங்களுக்குப் போதித்துவந்தார்கள். எல்லா உயிர்களும் சகோதரர்கள் என்ற உண்மையை அடிப்படையாகக்கொண்ட பிரமஞ்ஞானசங்கம் அந்த உண்மைக்கு மாறாக நடைபெற்றுவருகிற போலி சாதிப்பிரிவினைகளினாலுண்டாகும் கொடுமைகளைக்கண்டு சும்மா இருக்க முடியுமா? அது சாதிக்கொடுமை நீங்க வேலை செய்துதான் தீர வேண்டும். ஆதலின் அப்படியே பிரமஞ்ஞான சங்க அங்கத்தினர்கள் வேலை செய்துவந்தார்கள். சாதிக்கொடுமைக்குக் காரணமாயுள்ள அறியாமையை நீக்கும்படியான அறிவு உண்மைகளை அவர்கள் ஜனங்களுக்குச் சொல்லியும் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் எழுதியும் வந்தார்கள். பிரமஞ்ஞானசங்கக் கூட்டங்களில் பல சாதி வகுப்பினர்களுக்குச் சேர்ந்த அங்கத்தினர்கள் கூடியவரை சகோதர நேயத்துடன் ஒழுகியும் காட்டினார்கள். சகோதர ஒருமைப்பாடு என்ற உண்மையாகிய கோடரியானது சாதிக்கொடுமை என்னும் மரத்தினை வேரற வெட்டிச்சாய்க்க வல்லது. அந்த ஆயுதத்தைக்கொண்டு பிரமஞ்ஞான சங்கம் வேலை செய்துவருகிறது. இதுவன்றி அது உலக மக்கள் நலம் கருதிய பரந்த நோக்குடன் யாதொரு வன்மையுமின்றி மெதுவாய் அறிவைப் புகட்டி வேலை செய்கிறது. ஏனையசங்கங்களும் தேசாபிமானிகளும் இவ்வாறு வேலை செய்யாததினால் அவர்கள் வேலை அப்பொழுதைக்கு அப்பொழுது சிறிது பயனை மேலாம்பரமாக உண்டுபண்ணினது அல்லாமல் பிரமஞ்ஞானசங்கம் வேலைபோல நிலைத்திருக்கும்படியான பயனை உண்டு பண்ணவில்லை, இன்னும் விரிப்பிற் பெருகும். சுருங்கக் கூறில், பிரமஞ்ஞான சங்கமே அதன் பரந்த நோக்கத்தாலும் வியாபகத்தாலும் இந்திய நாட்டில் இந்து மக்களின் பல வகுப்பினர்களுக்குள் நடைபெற்றுவருகிற சாதிக்கொடுமையை அடியோடே நீக்கி நாட்டுக்கு நலம் செய்யவல்லதாயிருக்கிறது. சாதிக்கொடுமை இன்னம் எவ்வளவோ இந்தியாவில் இருக்கிறது. பிரமஞ்ஞான சங்கம் முன் வேலைசெய்து வந்ததுபோல இப்பொழுதும் வேலை செய்துகொண்டு வருகிறது. இருக்கிற வேலைக்கு அது

செய்கிறது மிகக்கொஞ்சம். இந்திய நாட்டு மக்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அதனைச்சேர்ந்து வேலை செய்வார்களோ, எவ்வளவுக்கு எவ்வளவு அதனை ஆதரித்து உதவி செய்வார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அதன் வேலை மிகுந்து, பயனும் அதிகமாய், இந்திய நாடு தன் மக்களுக்குள்ளிருக்கிற சாதிக்கொடுமை நீங்கி நலம் அடையும்.

தொடரும்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை,
சிந்துபூந்துறை.

---

ௐ ॥

ஆசிரியப்பா.

## இன்ப அரசு.

## KINGDOM OF HAPPINESS.

| | | | |
|---|---|---|---|
| வல்லே | யருட்குரு | வருகிறு | ருலகிற்கு |
| எல்லா | மக்க | ளிதயத் | தினிலே |
| நல்லறி | வன்பு | நலமுற | வளர்கவே; |
| செல்லுஞ | செயலுஞ் | செம்மைய | தாகுக; |
| பொல்லாக் | கொடுமை | போயொழி | யவ்வே; |
| அல்கவே | இன்ப | வரசெவ் | விடத்துமே. |

வல்லே = சீக்கிரம் = soon
அல்க = தங்க = abide

The Gracious Teacher comes soon to the world;
May good thoughts and love grow beneficially
in the hearts of all people;
May all possible action be good;
May the mischievous violence vanish,
May the Kingdom of Happiness abide everywhere.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை,
சிந்துபூந்துறை.

# திவ்யஞானஸாரம்.

151-ம் பக்கத் தொடர்ச்சி.

## த்யான யோகம்.

இதற்கு உபாயம், பகவத்கீதாசாஸ்த்ரம் 6-வது அத்யாயத்தில் போதித்திருக்கும் யோகம் தான். யோகமென்பது, நம்மைப்போல்பவர்களுக்கு ஸாத்யமாகாத ஏதோ ஒரு கஷ்டமான அப்யாஸமென்று நினைக்கக்கூடாது. ஹடயோகிகள் அப்யாஸம் செய்யும் 84 ஆஸனங்களும், பல் வேறு முத்திரைகளும் இங்கே அவஸரமில்லை. இராஜயோக மாக்கத்தில் இவைகள் முக்யமல்ல. யோகமென்றுலென்ன? சப்தார்த்தம் "சேர்க்கை". நம் மனஸ்ஸை, தன்னிஷ்டம்போல், விஷய போகங்களைச் சிந்தித்துக்கொண்டு, ஓடவிடாமல் செய்து இஷ்ட தேவதையின் பேரிலேயே நிலைத்திருக்கச்செய்வது தான் யோகாப்யாஸம். மனோ தர்மங்கள், சிலவற்றை அறிந்துகொண்டு அந்தத் தர்மங்களை நம் மனஸின் பரிணமத்திற்காக (மாறுதலுக்காக) வினியோகப் படுத்துவதுதான் யோகம். பயிர்த்தொழில் செய்யும் குடித்தனக்காரன், வ்யவஸாய சாஸ்த்ரத்தைத் தெரிந்துகொண்டு, அந்த சாஸ்த்ரத்தை அனுஸரித்து, வ்யவஸாயம் செய்தால் பலன் நிச்சயம் தானல்லவா? அப்படிச்செய்யாமல், கிருஷி சாஸ்திரத்தைத் தெரிந்துகொள்ளாமல் இஷ்டானுஸாரம் வேலைசெய்தால் செய்த கிருஷி விருதாவாய் விடும். அப்படியே, நம் அந்தக்கரணம் (உள் இந்த்ரியம்—மனஸ்) பரிசுத்தமாய்ப் பரிபாகமடைய வேண்டுமானால், மனோ தர்மங்களையறிந்து அதை நாம் நமக்கு ஸரிப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த அர்த்தம் கீதை 6-வது அத்தியாயத்தில் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

𑌯𑍋𑌗𑍀 𑌯𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 𑌸𑌤𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌰𑌹𑌸𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃।
𑌏𑌕𑌾𑌕𑍀 𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌰𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃॥

𑌶𑍁𑌚𑍌 𑌦𑍇𑌶𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑌾𑌸𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌨𑌾𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌂 𑌨𑌾𑌤𑌿𑌨𑍀𑌚𑌂 𑌚𑍈𑌲𑌾𑌜𑌿𑌨𑌕𑍁𑌶𑍋𑌤𑍍𑌤𑌰𑌮𑍍॥

𑌤𑌤𑍍𑌰𑍈𑌕𑌾𑌗𑍍𑌰𑌂 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌕𑍍𑌰𑌿𑌯𑌃।
𑌉𑌪𑌵𑌿𑌶𑍍𑌯𑌾𑌸𑌨𑍇 𑌯𑍁𑌞𑍍𑌜𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍋𑌗𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇॥

கீதை அ-6 சு 10 12-

எப்பொழுதும் யோகம் அப்யஸிக்கவேண்டும். ஆத்ம சுத்தியின் பொருட்டு யோகம் அப்யாஸம் செய்யவேண்டும்.

இந்த விஷயத்தில் முக்கியமாகச் சில மனோதர்மங்கள் நிரம்பவும் ஸஹாயம் தரும். அவையாவன:-

1. ''யத்பாவம் தத்பவதி'' மனுஷ்யன் அடிக்கடி எந்த பாவங்களைத் தியானிப்பானோ அந்த ரூபமாக மாறுவான்.

(2) ப்ரதிதினமும், ப்ராதக்காலத்தில் தூங்கி எழுந்த உடன், ஏதாவது ஒரு எண்ணம் (பாவம்), மனஸ்ஸில் நன்றாக அழுந்தும் படியாக யோசித்தால், அந்த பவாம் மனதில் நின்று, மனஸுக்கு வேறு வேலை இல்லாமல், ஒழிவாக இருக்கும் காலத்தில் மறுபடியும் மறுபடியும் ஞாபகத்திற்கு வந்துகொண்டிருக்கும்.

(3) ப்ரதிதினமும், காலநியமத்தை ஏற்படுத்திக்கொண்டு, அக்கால நியம ப்ரகாரம் வேலைகளைச்செய்ய ஆரம்பித்தால், பழக்கத்தின் பலத்தால், அந்தந்தக் காலத்தில் தப்பாமல் அந்தந்த கார்யங்கள், ஞாபகத்திற்கு வரும். மனதும் சரீரமும் அந்தந்தக் கார்யங்களில் பிரவர்த்திக்கத் தகுந்த ஸ்திதியிலிருக்கும்.

இப்போது காட்டிய தர்மங்களை ஒவ்வொன்றாகப் பரிசீலனம் செய்து பார்ப்போம்:-

யத்பாவம் தத்பவதி.

மனுஷ்யனெந்தந்த பாவங்களை, அடிக்கடி சிந்திப்பானோ அந்தந்த ரூபமாக மாறுவான். அடிக்கடி கெட்ட எண்ணங்களை எண்ணிக்கொண்டு, கெட்ட கார்யங்களை செய்ய எண்ணங்கொண்டிருக்கிறவனுடைய மனஸ், அந்தக்கெட்ட எண்ணங்களுடன் நிறைந்து, சிலகாலத்தில் அந்தக்கெட்ட எண்ணங்களும் ஆலோசனைகளும் வழக்கத்தால் அவனுக்கு ஸ்வபாவமாகி அவன் கெட்டுப்போவான். துன்மார்க்கர்களோடு ஸஹவாஸம் செய்து அப்படிப்பட்டவர்களையே நினைத்துக்கொண்டு வந்தால் அவர்களுடைய ஸ்வபாவம் தான் பிடிபடும். அப்படிக்கின்றித் தினந்தோறும் ஈசுவரனையாகிலும், ஈசுவர ஸமானர்களான மஹாத்மாக்களாகிய ரிஷிகளையும் காரண குருக்கள், பரம குருக்களையும் சிந்தித்துக்கொண்டே வந்தால் நாமும் அவர்களின் சுபலக்ஷணங்கள் உள்ளவர்களாக மாறி அவர்களைப்போலாவோம். ஆகையால் பிரதிதினமும் கொஞ்சகாலம் பகவத் தியானம் செய்யத்தகும்.



## த்யானம்.

த்யானமென்றால் சிந்தித்தல். பகவானை ஸ்திரமான மனஸுடன் சிந்திப்பது தான் தியானம். அப்படிச் சிந்தித்துக்கொண்டு, மனதை இதர விஷயங்கள் முகமாக ஓடவிடாமல் செய்து ஈசுவரனிடத்தில் நிறுத்துவது தான் தியானயோகம். இதைத்தான், அப்யாஸமென்றும், அப்யாஸ யோகமென்றும், சொல்வார்கள். ஈசுவரனைச் சிந்தித்தலென்றாலென்ன ? ஸாமான்யமாக எல்லோரும் செய்யும், நாம ஸ்மரணம், நாமோச்சாரணம் மட்டுமல்ல. மனதில் பகவானை நிறுத்தவேண்டும். அதெப்படி என்றால்:—

முதன் முதலில், ஒவ்வொருவரும் தியானம் செய்வதற்கு அவரவரின் பூர்வ கர்மானுஸாரமான, ருசி விசேஷத்திற்கு ஒத்தாற்போல், ஒரு இஷ்ட தேவதையை நிச்சயித்துக் கொள்ளவேண்டியது. ஈசுவரனை விட வேறான தேவதா உபாஸனை என்று பொருள்படுத்திக் கொள்ளக்கூடாது. பகவானுடைய லீலா விக்ரஹங்களில், ஒரு ரூபத்தை லக்ஷ்யமாக வைத்துக்கொண்டு, தினந்தோறும் மனதை அந்த லக்ஷ்யத்தின்மீது வைத்துத் தியானிக்க வேண்டும். லக்ஷ்மி நாராயண ரூபம், ஸாம்பமூர்த்தி ரூபம், சக்தி ஸ்வரூபங்களிலொன்று, ஸ்ரீராம க்ருஷ்ணாத்யவதாரங்களிலொரு ரூபம், பரம குருக்களான ருஷிகளின் ரூபம், அல்லது இதர மதஸ்தர்களின் பக்திமான்கள், தங்கள் தங்கள் ஆசாரப்ரகாரம், பகவானுடைய அவதார ரூபங்களையாகிலும், மத ஸ்தாபனம் செய்த மஹாத்மாக்களின் ரூபங்களையாகிலும், மனதில் நிறுத்தி, ஏகாக்ர சித்தத்துடன் அந்த ரூபத்தைத் தியானிக்கவேண்டும். மனஸ் ஒரு முகமாய் நிற்பதற்கு ஆதாரமாக ரூபம் ஒன்று வேண்டும். ஆதாரமில்லாமலே கேவல ப்ரஹ்ம தத்வத்தைத் தியானிப்பது, ஸாதாரணமான மனிதர்களுக்குக் கஷ்ட ஸாத்யம்.

க்லேசோऽதிகதரஸ்தேஷாமவ்யக்தாஸக்தசேதஸாம் ।
அவ்யக்தா ஹி கதிர்துக்கம் தேஹவத்பிரவாப்யதே ॥
(கீதை அ. 12, சு. 5.)

ஆதாரமில்லாத அவ்யக்த அக்ஷர ப்ரஹ்மோபாஸனம் ஸாமான்யமான சரீரதாரிகளுக்கு (தேஹாபிமானிகளுக்கு) அதிக கஷ்டமென்று தாத்பர்யம்.

இப்படி இஷ்டதேவதையினுடைய ஆகாரத்தை மனதில் நிறுத்தித் தியானிப்பது முதலாவது படி. இப்படிப்பட்ட தியானத்தைப் பற்றி ஸ்ரீமத் பாகவதத்திலிப்படிச் சொல்லி இருக்கிறது:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

முராரி (உபாஸ்ய தைவம்) யினுடைய ரூபத்தைச் சித்தமென்ற சுவரின்மீது, சித்திரம் எழுதினாற்போல் நிறுத்தி அந்த தைவரூபத்தின் பாதங்களில், புஷ்பங்களைப்போல் மனஸ்ஸை அர்ச்சனை செய்து (பக்தி பரவசத்தால்) சரீரத்தில் பக்தி சின்னங்கள் (ஸாத்விக பாவங்கள், மயிர்கூச்சல் முதலானவைகள்) காணப்படுமாறு தியானிப்பவர்கள், இந்த ஜன்மத்திலேயே ஸம்ஸாரஸமுத்ரத்தைத் தாண்டுவார்களென்று தாத்பர்யம்.

இந்த அர்த்தத்தைச் சிறிது விசாரிக்கவேண்டும். முதலில் உபாஸ்யத்தின் (உபாஸனை செய்யப்படுவதின்) உருவத்தைச் சித்திரமெழுதுகிறவன், சுவரின்பேரில் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரதிமையை எழுதும் மாதிரியாக, மனதில் இஷ்ட தேவதையின் ரூபத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பாவித்து நிறுத்தவேண்டும். பாதங்களிடத்திலாரம்பித்து க்ரமக்ரமமாக, சிரஸ்ஸுவரையில் ஸர்வாங்கங்களையும் மனதில் கல்பனை செய்துகொள்ளவேண்டும். நம் தேசத்தில் பாஹ்யமாகப் பூஜை செய்வதில் ஸர்வாங்க பூஜை செய்வதுண்டல்லவா? பாதௌ பூஜயாமி, ஜங்கௌ (முழங்கால்) பூஜயாமி உதரம் (வயிறு) பூஜயாமி, ஹ்ருதயம் பூஜயாமி, கண்டம் (கழுத்து) பூஜயாமி, முகம் பூஜயாமி" என்று ஒவ்வொரு அங்கத்தையும், ஆபாத மஸ்தகம் (கால்முதல் தலைவரை) பூஜிப்பதில் கேவலம் பாஹ்ய விக்ரஹத்தில் புஷ்பங்களை வைக்கிறதல்ல. அந்தந்த அங்கத்தை நினைத்துக்கொண்டு, பிம்பத்தை மனதில் கல்பித்துக்கொள்வதுதான் உத்தேசம். கடைசியில், "ஸர்வாண்யங்கானி பூஜயாமி" என்று சொல்லும்போது, பூர்ண பிம்பமும் சித்தமென்ற சுவரில் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். புஷ்பங்களைப்போல் மனதைப் பாதங்களில் அர்ப்பிக்கவேண்டும். புஷ்பங்களைப்போல் என்பதில்



கேவலம் உபமானம் அல்ல. பாஹ்ய பூஜையில் உபாஸகன் அர்ச்சிக்கும் புஷ்பங்கள், அந்தஃகரணத்தில் உண்டாகும் பக்தி பாவங்களைக் காட்டும் வெளி அடையாளங்கள். வாஸ்தவத்தில், ஏகாக்ர சித்தத்துடன் பகவானையாகிலும், பரம குருக்களையாகிலும், த்யானிக்கும் பக்தன் ஹ்ருதயத்திலிருந்தும், சிரஸ்ஸிலிருந்தும், திவ்ய ஸுந்தரங்களான நீலோத்பல புஷ்பங்கள், கமலங்கள், முதலான புஷ்பங்களைப்போல், ரூபங்கள் வெளிவருவதுபோல் யோகதிருஷ்டியால் பார்க்கிறவர்களுக்கு ஸ்பஷ்டமாகக் காணப்படுமென்று திவ்ய ஞானஸமாஜ அத்யக்ஷர்களான ஸ்ரீமதி அனிபெஸண்டம்மையாரும், ஸ்ரீயுத லெட்பீடர் அவர்களும் எழுதியிருக்கிறார்கள். அப்படிப் புஷ்பரூபமாக வெளிவரும் பக்தி பாவங்கள், உபாஸ்யனுடைய பாதங்களில், அர்ச்சனை செய்யவேண்டுமென்றர்த்தம். இப்படி நெறியாகத் தியானம்செய்துகொண்டு வருவதில் உபாஸ்ய தைவத்தின் ரூபம் மனதில் ஸ்திரமாகி கண்களை மூடினவுடனே, உபாஸ்யரூபம் மனஸுக்கு பிரத்தியக்ஷமாகும். உபாஸ்யனுடைய தேஜஸ்ஸும், மஹிமையும் அந்த ரூபத்தில் நிறைந்து பகவானுடைய அவதாரங்களைப்போல் யதார்த்தமான ரூபமாகும். இப்படிப்பட்ட ரூபம் அஷ்ட (எட்டு) வித அர்ச்சாவதாரங்களி லொன்று.

இதுவரையில் வர்ணித்தது ஸ்வரூபதியானம். ரூபத்தை மாத்திரம் தியானிப்பது போதாது. அந்தப்பகவானுடைய குணங்களை எப்படிப்பட்டவைகளாகத் தியானிப்போமோ அப்படிப்பட்ட குணங்களே நமக்கும் பிடிபடும்.

---

## குணானுஸந்தானம்.

ஆகையால் உபாஸ்யனுடைய திவ்ய கல்யாண குணங்களை ஒவ்வொன்றாகத் தியானிக்கவேண்டும். ரூபத்தைத் தியானிப்பதில் மனஸ்ஸை ஏகாக்ரமாக (ஒரு முனையாக) செய்த பிறகு, பகவானுடைய அனந்த கல்யாண குணங்களைச் சிந்திக்கவேண்டும். இதை உத்தேசித்தே அர்ச்சனைகளை விதித்தார்கள். ஸஹஸ்ர நாமார்ச்சனை, அஷ்டோத்தர சத நாமாவளி அர்ச்சனை, உபாஸ்யனுடைய அமானுஷ்ய (மனிதனால் நடத்தக்கூடாத) சர்யைகளை ஸ்மரித்து, அதன் மூலமாக அவருடைய கல்யாண குணங்களைத் தியானிப்பதற்கு ஸஹாயமாக விதிக்கப்பட்டிருக்கிறவை. ஆதலால்

உபாஸ்யனை, தயாஸ்வரூபனாகவும், சாந்தஸ்வரூபனாகவும், காமதஹனனாகவும், ஸத்யஸ்வரூபனாகவும் தியானித்தால், உபாஸகனும் (உபாஸனை செய்கிறவன்) தயா ஸ்வரூபனாகவும், சாந்த ஸ்வபாவமுள்ளவனாகவும், காமத்தை ஜயித்தவனாகவும் ஆவான். அப்படியே மனுஷ்யனுடைய அல்ப குணங்களாகிய குரோத ஆக்ரஹ (கோபம்) குணங்களை உபாஸ்யனிடத்தில் ஆரோபித்து அப்படிக் குரோதமூர்த்தியாகத் தியானித்தால் உபாஸகனும் குரோதமுள்ள மூர்த்தியாக ஆகிவிடுவான். சத்ருநாசத்தை உத்தேசித்துச் செய்யும் உபாஸனைகள் இப்படிப்பட்டவை யல்லவா? இப்படிப்பட்ட உபாஸனைகளால் ஜீவனுக்கு புருஷார்த்தம் பங்கமாகும். பகவான் சொல்லியிருக்கிறாரல்லவா?

"க்ரோதாத்பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதிவிப்ரம: |
ஸ்ம்ருதிப்ரம்சாத் புத்திநாசோ புத்திநாசாத் ப்ரணச்யதி"||
(கீதை அ 2, சு 63.)

க்ரோதத்தினால் மோஹம் (அஞ்ஞானம்), மோஹத்தால் மதிப்ரமை, மதிப்ரமத்தால் புத்தி நாசம், அதனால் விநாசம், என்றால் புருஷார்த்த பங்கமுண்டாகும். பகவானுடைய கல்யாண குணங்களெனும் தைவீஸம்பத் குணங்களை ஒவ்வொன்றாகத் தினந்தோறும் தியானித்துக்கொண்டு வருகையில், சில காலத்தில் அந்தந்தக் குணம் பக்தனுக்கு ஸ்வபாவமாகும். அனேக குணங்களை ஒரே தடவையாகத் தியானித்தால் அவ்வளவு பலன் உண்டாகாது.

குணத்தைத் தியானித்தல் என்றால் என்ன? ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்வோம். பகவான் தயாஸ்வரூபன். தயை என்றால் என்ன? தயையை அப்யாஸம் செய்வது எப்படி? தயையுள்ள மனுஷ்யன் லோகத்தில் எப்படி நடந்துகொள்வான்! தயா ஸ்வரூபர்களாகிய மஹான்கள் முன்காலத்தில் எப்படி நடந்தார்கள்? ரந்திதேவர் சிபிசக்ரவர்த்தி முதலான மஹா புருஷர்களின் சரித்ரங்கள் என்ன போதிக்கின்றன! எந்த ஸந்தர்ப்பங்களில் தயையை அப்யஸிப்பதற்குத் தடைகள் ஏற்படும்? தடைகள் நேரிட்டபொழுது எப்படி நடந்துகொள்ளவேண்டும்? இந்த விதத்தில் புத்தியை விநியோகித்து யோசனைசெய்து, தயாகுணத்தை அனுஷ்டிக்கும் மார்க்கத்தைப் பிரதிதினமும் யோசித்து, நிச்சயித்துக்கொண்டு வரவர, தினந் தினமும் புதிய மார்க்கங்கள்



ஸ்புரித்து நம்மிட ப்ரவர்த்தனையை செவ்வைப்படுத்தும். ஒழிவு இருக்கும்போது, சாந்தமான மனதுடன் யோசித்து நிச்சயித்துக் கொள்ளாமல், லௌகிக வ்யவஹாரத்தில் ப்ரவர்த்திப்பவர்களுக்கு, பற்பல ஸந்தர்ப்பங்கள் நேரிடும்பொழுது நடந்துகொள்ளும் மார்க்கம் தெரியாமல் தப்புவழிகளில் விழுவார்கள். வரப்போகும் சத்ருவைக் குறித்து முன் எச்சரிக்கை உண்டாகித் தகுந்த யோசனை செய்துகொண்டு ஸித்தமாக இருப்பவனைப் போல், அநுகூலமில்லாத ஸந்தர்ப்பங்கள் தடஸ்தமானபொழுது மேல்சொன்ன மாதிரியாகத் தினந்தினமும் தியானம் செய்கிறவன் எந்த ஸந்தர்ப்பங்களிலும், செவ்வையான மார்க்கத்தை ஸ்பஷ்டமாகத் தெரிந்துகொண்டு நடப்பான். இப்படி ஒவ்வொரு குணத்தையும் ப்ராதஃகாலத்தில் தியானித்துத் தினசர்யையில் அனுஷ்டானம் செய்துகொண்டு வரும்பொழுது, க்ரம க்ரமமாக அந்தக்குணம் ஸ்வபாவத்தில் ஸ்திரப்படும். நாளடைவில் ஒன்றின்பின்னால் ஒன்றாகக் குணங்கள் ஸ்திரப்பட்டுக்கொண்டு வரவர, ஸ்வபாவம் பரிசுத்தமாகும்.

இந்த அப்யாஸம் எவ்வளவு கொஞ்சகாலம் செய்தபோதிலும், செய்தமட்டில் அது ப்ரயோஜனத்தைத் தரக்கூடியது. வ்ருத்தாப்யத்தில் ஆரம்பித்துக் கொஞ்சம் காலம் அப்யாஸம் செய்தாலும் அந்த அப்யாஸம்கூட வீண்போகாது.

"ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்"||
(கீதை அ 2, சு 40)

அந்த ஸ்வல்பமும் கூட ஜீவனுடைய விஞ்ஞானமய கோசத்தில் நின்று, வரப்போகும் ஜன்மத்தில் திரும்பி முளையாகக் கிளம்பி அந்த வழியில் நடக்க ஸஹாயமாகும்.

இந்தத்தியானாப்யாஸத்தால் உத்தமமான பலனை யடைய வேண்டுமானால் அநுஸரிக்கவேண்டிய நிபந்தனைகள் சில உண்டு. அந்த நிபந்தனைகளை யறிந்து அந்தப்ரகாரம் நடத்திவந்தால் பலன் சீக்கிரமாகவும் உண்டாகும். செய்யும் க்ருஷி பூர்ண பலனையும் தரும்.

(இன்னும் வரும்.)

# பிரமாண வாக்கியங்கள்.

3. ந சர்மணோ ந ரக்தஸ்ய ந மாம்ஸஸ்ய ந சாஸ்தி²ந꞉ ।
ந ஜாதிராத்மநோ ஜாதிர் வ்யவஹாரப்ரகல்பிதா ॥

(இ-ள்) (ஜாதியானது தேகத்தின்மேலுள்ள) தோலுக்குமில்லை, இரத்தத்திற்குமில்லை, மாம்ஸத்திற்குமில்லை, எலும்புக்குமில்லை. ஆத்மாவுக்கு ஜாதியில்லை. ஜாதியானது வியவஹாரத்தின் பொருட்டு கற்பிக்கப்பட்டிருக்கிறது.

நிராலம்போபநிஷத்.

4. ஸத்யம் தா³நம் க்ஷமா ஶீலம் ஆந்ருஶம்ஸ்யம் தபோ க்⁴ருணா ।
த்³ருஶ்யந்தே யத்ர நாகே³ந்த்³ர ஸ ப்³ராஹ்மண இதி ஸ்ம்ருத꞉ ॥

(இ-ள்.) யாவனொருவனிடத்து வாய்மையும், ஈகையும், பொறையும், நன்னடையும், பரோபகார விருப்பும், தவமும், கருணையும் காணப்படுகின்றனவோ அவன்தான் பிராமணன்.

மஹா பாரதம், ஆரண்யபர்வம்.

5. ஶூத்³ரப்ராயா ஹ்யவர்ணா꞉

ஸகல ஜாதியாரும் சூத்திரரைப்போலாவார்கள்.

விஷ்ணுபுராணம்.

6. கலௌ பஞ்சஸஹஸ்ராந்தே ஜாயதே வர்ணஸங்கர꞉ ॥

கலியுகத்தின் ஐயாயிரம் வருஷங்களுக் கப்பால் ஜாதிகளின் குழப்பம் உண்டாகும்.

விஷ்ணு புராணம்.

7 சாதியாவ தேததா சலந்திரண்ட நீரலோ
பூதவாச லொன்றலோ பூதமைந்து மொன்றலோ
காதில்வாளி காரைகம்பி பாடகம்பொன் னென்றலோ
சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே.

சிவவாக்கியம்.

8. பறைய னென்பதும் பண்டித னென்பது
மறையு மிந்த மலின வுடலையே
பறையர் தம்முளும் பண்டிதர் தம்முளு
மறிவ னேகமென் றுரநிந் தோர்களே. அதிரகசியம்.

9. சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறு
மாதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே.

திருவாசகம்,

## பத்திராதிபர் குறிப்புகள்.

ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் சென்ற 1926-ம் ஹு டிஸம்பர் மீ 24உ முதல் 30உ முடிய நடந்த பிர்ம்மஞான சபையின் 51-வது கூட்டம், பிரஸிடெண்டு டாக்டர் பெஸண்டு அம்மையார் அவர்கள் ஸ்ரீமான் கிருஷ்ண மூர்த்தி அவர்களுடன் அமெரிக்காவில் தங்கும்படி நேர்ந்தமையால், வைஸ் பிரஸிடெண்டு ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாஸரவர்கள் அக்கிராசனத்தின் கீழ், அவரும் ஸ்ரீமான் யோகி லெட்பீட்டரவர்களும், ஸ்ரீமான் ஜீ. எஸ். அருண்டேல் அவர்களும், ஸ்ரீமான் யதுநந்தன் பிரஸாத் அவர்களும் அரிய பெரிய விஷயங்களைப்பற்றி உபந்யாசித்தார்கள். அவ்வுபந்யாஸங்கள் மிகவும் அற்புதமாயிருந்தன. கேட்போர் மனமெல்லாம் கரைந்து உருகின. இவ்விதம் காசியில் இதற்கு முன் விமரிசையாய் நடந்ததே யில்லையென்பது எல்லோருடைய அபிப்பிராயம். அதில் உபன்யசிக்கப்பட்ட விஷயங்களைக் கூடியமட்டில் விவரமாய் எழுதுவதற்கு அவகாசமில்லாமைபற்றி அடுத்த சஞ்சிகையில் பிரசுரஞ் செய்வதாய் நிறுத்திவைத்திருக்கிறோம்.

சுருக்கிச் சொல்லுமிடத்து ஆறுவது மூலவர்க்கம் சீச்கிரத்தில் உண்டாகப்போகிறபடியாலும், அதை ஒட்டி இப்பொழுதே ஆங்காங்கு புதிய ஆறுவது உபவர்க்கம் ஆரியவர்க்கத்தில் தோன்றி வருவதாலும், உத்தம ஜீவர்கள் வந்து ஜனிக்கக்கூடியதாய் தாய்மார்களுடைய ஸ்திதியை உயர்த்த வேண்டுமென்றும், இந்தியச் சிறுவர்கள் சிறுமிகள் ஒழுங்கான கல்வி முறையில் முன்னேற்றத்தை அடைய வேண்டுமென்றெண்ணி அதற்காகவே நமது மாது ஸ்ரீ பெஸண்டம்மையவர்கள் நம் இந்திய நாட்டிற்காக அமெரிக்காவில் மூலைக்கு மூலை சென்று பணம் சேகரிப்பதானது நம் இந்தியர்களுக்கு அழகாயிருக்கிறதாவென்றும், அதிலும் பிரம்மஞான ஸபையார்கள் அது விஷயமாய் அவரவர் சங்கத்தில் கூடிய முயற்சி எடுக்காமல் இருப்பதானது பரிதாபப்படக்கூடிய விஷயமாயிருக்கிறதென்றும், பஞ்சமர்களின் கல்வி விஷயமாய் வேண்டிய முயற்சி எடுக்காமல் இருப்பதால் அதனால் ஏற்படக்கூடிய கேடுகள் இன்னவையென்பதை நம்மவர்கள் அறியாது காடாந்தகார உறக்கத்தில் அமிழ்ந்திருத்தல் வருத்தப்படக்கூடிய விஷயமாயிருக்கிறதென்றும், இந்து முஸ்லிம் ஐக்கியத்திற்கு தீவிரமாய் வேலை செய்யவேண்டுமென்றும் இன்னும் இவைகளைப் போலொத்த அரிய பெரிய விஷயங்கள் மிகவும் அற்புதமாய் உபன்யசிக்கப்பட்டன. இவையல்லாமல் வழக்கம்போல் பாரதசமாஜ பூஜை, கிறிஸ்தவ கதோலிக் பூஜை, ஸர்வமதப் பிரார்த்தனை, ஸ்திரீகளின் கூட்டம், பாலர்களின் கூட்டம், சாரணர்கள் கூட்டம், முதலிய

ஸமஸ்த கூட்டங்களும் செவ்வையாய் நடந்தேறின. இப்பொழுது ஸகல தேசங்களும் பலவிதங்களால் நெருக்குண்டிருப்பதால் எவ்விதம் சரீரத்தில் ஓரிடத்தில் விஷம் பட்டாலும் அது சரீரம் முழுவதும் வியாபிக்குமாபோல் தேசத்தில் இது ஸமயம் எங்குகெடுதி இருக்கினும் அது எல்லா தேசங்களுக்கும் பரவி, எல்லா தேசங்களும் பாழாகிப் போகுமாதலால் ஸகல தேசங்களும் ஜாக்கிரதையாக விழித்துக்கொண்டிருந்து, ஸஹோதர பாவத்திற்கு விரோதமான எண்ணங்களையாவது விருப்பங்களையாவது செய்கைகளையாவது உண்டாக்காமலிருக்க முயற்சிக்கவேண்டுமென்றும், அதிலும் இதர தேசங்கள் நமது இந்தியாவை ஞானத்திற்காக நோக்குவதால் முக்கியமாய் இந்தியர்கள் தங்கள் உத்தரவாதத்தை உணர்ந்து, வீண் அபசாரத்திர்குள்ளாகாமல் வழிகாட்டிகள் ஆகவேண்டுமென்றும் சொல்லப்பட்டன.

ஆகையால் இந்தியர்களாகிய நாம் நசுவரமான விஷயங்களில் இனியேனும் மனதைச் செல்லவிடாமல், இது முதலேனும் ஆப்த வாக்கியங்களை மனதில் வாங்கி, இயற்கை அறிவைக்கொண்டு இக்காலத்திய காலப்போக்குடன் ஒட்டி பரிசீலித்துப் பார்த்து, அவதாரமாகியிருக்கும் பரமனுக்கு உவப்பாயுள்ள கைங்கரியங்களில் ஈடுபடும் பாக்கியத்தைப் பெறுவோமாக.

மேற்கண்ட பிரம்மஞானஸபை வருஷோத்ஸவத்திற்கு ஆஸ்ட்ரேலியாவிலிருந்து விஜயம் செய்திருந்த பிஷப். யோகி C. W. லேட்பீட்டர் என்னும்பெரியார், இந்தமாதம் 3வ. அடையார் வந்திருக்கின்றனர். அடையார்வாஸிகள் சென்னை ஸெண்டரல் ஸ்டேஷனில் இந்தஞானச்ரேஷ்டரை விசேஷ உத்ஸாகத்துடன் வரவேற்று, அடையார் அழைத்து வந்து, அங்கு வெகு சிறப்பாய் அலங்கரிக்கப்பட்ட தலைமை ஸ்தான மண்டபத்தில் விசேஷ சிரத்தா பக்தியுடன் வரவேற்பு உபசாரங்களை நடத்தினர். இந்த ஞான தேசிகரின் மஹத்தான கைங்கரியம் இன்னும் ஆஸ்ட்ரேலியாவில் நடைபெற வேண்டியிருப்பதால் அடையாற்றில் அதிக நாட்கள் தங்குவதற்கில்லாமல் சீக்கிரம் அங்கு பிறப்பட்டுச் செல்வார்களென்று அறிகிறோம்.

# தியானக்கிரம விஷயம்.

## ஜனவரி மாதம்.

### மார்க்கம்.

2/8811

1வ. சாந்தியை அடைவதற்கு வழிகாட்டும் மார்க்கத்தில் அடிவைப்பதற்கு முன் அனுசரிக்கவேண்டியது யாதெனில், நம்முடைய பிரக்ஞையை யதார்த்த ஆத்மாவினிடத்தில் ஒப்பிட்டு அது பார்ப்பதுபோல் பார்க்கவும், நிதானிப்பதுபோல் நிதானிக்கவும் முயற்சி செய்வதுதான்.

சாந்தி யடையுமிடம்.

2வ. மனிதன் அனேக ஜன்மங்களுக்குப் பிறகு ஓர் குறிப்பிட்ட லக்ஷியத்தை அடைந்ததும், அனேக ஜன்மங்களுக்கப்பால் சன்மார்க்கம் என்று சொல்லப்படும் வழியில் பிரவேசிக்கும்படியான ஸ்திதிக்கு வந்ததும், குருவானவர் முன்வந்து, அந்த மனிதன் கையைப் பிடித்துக்கொண்டு சிஷ்ய மார்க்கத்தில் நடத்தி, ஆத்மாவை அறிவதற்கு வேண்டிய முடிவான போதனைகளைக் கற்பிக்கின்றார்.

ஆத்மாவும் அதன் கோசங்களும்.

3வ. தீக்ஷை என்று சொல்லப்படும் நிலைமைக்கு நடத்தி, அத்தீக்ஷை மூலமாக மனிதனின் பூரணத்தன்மைக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும் மார்க்கம் ஒன்றுளது.

தீக்ஷா மார்க்கம்.

4வ. சன்மார்க்கத்திற்கு வழியானது மனிதனுடைய வாழ்க்கையிலேயே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. ஜீவன் வளர்ச்சியடைந்து பரிபாகமடைய அவசியமான எதுவும் அம்மார்க்கத்திற்செல்ல ஓர் படியாக உபயோகப் படுத்தப்படாமல் அவ்வாழ்க்கையில் இருக்கமாட்டாது.

தீக்ஷாமார்க்கம்.

5வ. எதன்றியில் மார்க்கத்தை அடைவது சாத்தியமில்லையோ எல்லாவற்றிலும் அந்த முதல் படியானது "மனித

ஸேவை" என்ற வார்த்தையில் அடங்கியிருக்கின்றது.

தீக்ஷாமார்க்கம்.

6வ அந்த மார்க்கமானது வெளிப்பார்வைக்கு ஓர் துறவு மார்க்கம்போல் காணப்பட்டாலும், உண்மையில் அது முன்னிலுமதிகமான ஆனந்தம், சாந்தி, சுகம் இவைகளையுடைய துறவு மார்க்கமாகவே விளங்குகின்றது; ஏனெனில் சாதாரணமாய் நினைக்கிறபடி அது சுகத்தைத் துறந்து துக்கத்தை ஏற்றுக்கொள்வதன்று; ஆனால் நித்தியானந்தத்தை நாடி அற்ப சுகத்தை விலக்கிக்கொள்வதே யாகும்.

வெளிப்பிரகாரம்.

7வ ஆத்மாவானது சன்மார்க்கத்தில் மேலே செல்லச் செல்ல சந்தோஷம் வரவர அதிகப்படுகின்றது; ஏனெனில் நாம் முதலில் விசனத்திற்கு அக்ஞானம் காரணமாக ஏற்பட்டிருந்ததாகக் கண்டோம். மிகக்கொடிய துன்பமானது நாம் அறிவை அடைவதற்கு முன் அடிக்கடி உண்டாவது உண்மையே, ஆயினும் அது அஞ்ஞானத்தினாலும் அறிவின்மையினாலுமே உண்டாகின்றது.

வெளிப்பிரகாரம்.

8வ அக்ஞானத்தில் மூழ்கியிருக்கும் உலகத்தையும் அதன் சுருள்களுக்குள் அவஸ்தைப்படும் மனிதர்களையும் பார்க்கையில், மனிதவர்க்கத்தை உஜ்ஜீவிக்கும்படி செய்யக்கூடிய மனிதர்களின் ஹிருதயங்கள் உலகத்தின் துன்பங்களை உணர்ந்து அதனால் அவற்றை ஒழிக்கும் மார்க்கத்தைத் தேடி உழைக்கும்படி அவர்கள் தூண்டப்படுகிறார்கள்.

வெளிப்பிரகாரம்.

9வ கண்கள் திறக்கப்பட்டவுடன், அவைகள் மூடியிருந்த பொழுது காணப்பட்டதைப் பார்க்கிலும், நாம் செய்யவேண்டிய வேலையின் மஹிமை நமக்கு அதிகமாய் விளங்குமென்பதை ஞாபகத்தில் வையுங்கள். மார்க்கத்திற் பிரவேசிக்க ஆரம்பித்தவனுக்கு அம்மார்க்கவாயிலின் வெளிப்



பக்கத்திலிருக்கிறவர்களின் மங்கலான கண்களுக்குத் தோன்றுவதைப் பார்க்கிலும், மார்க்கம் மிகவும் உன்னதமாயும் அதிக தூரமுள்ளதாயும் தெரியும்.

வெளிப்பிரகாரம்.

10வ மனிதர் தாங்களாகவே துன்பப்படுகிறார்கள். அவர்கள் பந்தப்பட்டவர்களல்ல; அதை அறிந்து கொள்ளுவதால் உலகம் பூராவும் அவர்களுடைய திருஷ்டியில் மாறுதலையடையும். மார்க்கத்திலுள்ள எல்லாக் கஷ்டங்களின் நிலைமையும் மாறிவிடும்.

வெளிப்பிரகாரம்.

11வ மார்க்கத்தின் வெளிவாசலைக் கடந்து உட்சென்றவன் அடையும் அதிகமான லாபங்களில் ஒன்று, இனி ஜனனமரணங்களின் அதிகாரத்தினின்றும் விடுபட்ட சிதறாத ஓர் பிரக்ஞையை அடைந்திருத்தலேயாம்.

வெளிப்பிரகாரம்.

12வ எல்லா ஜனங்களும் உணரும் மிகக்கொடிய விசனங்களில் இரண்டு, பிரிதல், மரணமடைதல் இவைகளினால் உண்டாகின்றவைகள். ஆனால் மார்க்கத்தின் வாயிலைக்கடந்து உள்ளே சென்றவனுக்கு பிரிதலும் மரணமும் அவன் வெளியுலகத்தில் இருந்தகாலையில் இருந்தாற்போலில்லை.

வெளிப்பிரகாரம்.

13வ மார்க்கத்தின் வாயிலைக்கடந்து உட்சென்றவர்களுக்கு, அவர்கள் பின்னால் விட்டுவந்த உலகத்தைத் திரும்பி கடைக் கண்ணாலேனும் பார்க்கும்படி செய்யவல்ல இன்பம் அல்லது நம்பிக்கை யூட்டுதல் ஏதேனும் அவ்வுலகில் அவர்களுக்குண்டோ?

வெளிப்பிரகாரம்.

14வ ஏனெனில், நம்முன்பாக நோக்கி யிருக்கும் இச் சன்மார்க்கத்தில் உண்டாகும் துன்பங்கள் உலக இன்பங்களைவிட அதிக மேன்மையுள்ளவையாயும், துக்கங்கள் உலக

வாழ்வில் கிடைக்கக்கூடிய சுகாநுபவங்களைப் பார்க்கிலும் அதிக மஹிமையுள்ளவையாயும் இருக்கின்றன.

வெளிப்பிரகாரம்:

15வ ஒரு மனிதன் பரம்பொருளிடம் பக்தி செலுத்துகையில், தௌராத்மியமெனும் மாயையைவிட்டு தன்முகத்தைத் திருப்பிக்கொண்டு அப்பரம்பொருளின் சன்னிதானத்தை நோக்கித் தன் திருஷ்டியைச் செலுத்துகிறான். அவன் இன்னமும் தடுமாறி வழியைவிட்டு விலகி அபஜய மடையலாம். ஆயினும் அவன் முகமானது சரியானவழியில் திரும்பிவிட்டது. அவன் வந்த மார்க்கத்தை (வீட்டை) அநுசரித்துச் செல்கிறான். அவனுடைய பக்தியின் வலிமையினால் அவன் நற்செய்கை யுடையோனாகியே தீருவன்.

பக்தியின் மஹிமை.

16வ நம்முடைய சொந்த சுபாவத்தைத் தெரிந்துகொள்ளப் பிரயத்தனப் படவேண்டும். அதை அறிந்துகொண்டால், ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்கு நம்மை நடத்தும் மார்க்கத்தை நாம் பார்க்கலாம்.

உபநிஷத்துக்களின் ஞானம்.

17வ என் சகோதரன் கெட்டவழியை அநுசரிப்பதினாலே அவனை அருவருத்து நிந்திக்கவேண்டும் என்று நான் சொல்லுகையில், அவன் உள் நிலைமையைப் பார்க்காமல் வெளி நிலைமையையே பார்க்கின்றேனல்லவா? எது கெட்ட வழியென்று எனக்குத் தோன்றுகிறதோ அவ்வழியானது அவனுக்கு வேண்டிய அநுபவத்தை யடையத் தேவையான மார்க்கமென்று அவன் ஆத்மாவுக்குத் தெரிந்திருக்கும், அந்த அநுபவ மடையும்வரை அவன் பந்தப்பட்டவன், சயற்சி யடைந்தவனன்று.

உபநிஷத்துக்களின் ஞானம்.

18வ ஆத்மா உன்னிடம் பேசினால் (நீ உன் உள்ளுணர்வால் விஷயத்தை உணர்ந்தால்) அதை உன் அறிவு ஒப்



புக்கொள்ள வேண்டுமென்று காத்திராதே. அந்த ஈசுவர துல்யமான வாக்கை நம்பு; அத்தெய்வீகத் தூண்டுதலுக்குக் கீழ்ப்படி; ரிஷிகளாலும், தீர்க்கதரிசிகளாலும், ஆசார்யர்களாலும் அநுசரிக்கப்பட்டதும், இக்காலத்திலும் சிஷ்யர்களால் அநுஷ்டிக்கப்பட்டு சரியான இலக்ஷியத்தை அடையும்படி செய்யத் தகுந்ததென்று கண்டு ருஜுப்படுத்தப் பட்டிருப்பதுமான மார்க்கத்தை அநுசரித்து நட.

ஆத்மா நிஜம் என்பதைத் தெரியப்படுத்தும் ருஜுக்கள்.

19வ நாம் தாமதமாயாவது சீக்கிரமாகவாவது மேலே செல்லலாம்; எல்லாருக்கும் போதுமான கால மிருக்கிறது. மிகச் சோம்பேறிக்குங்கூட போதிய சாவகாச மிருக்கிறது. ஒவ்வொருவனுடைய ஹிருதயத்திலும் ஈசுவரன் வசிப்பதால் ஒவ்வொருவனிடமும் போதுமான சக்தி யிருக்கிறது. நம்முடைய கடைசி முடிவை ஒன்றும் மாற்றமுடியாது; ஒவ்வொருவ னிடமுமுள்ள ஈசுவர சங்கற்பமாகிற இச்சை முடிவில் சித்திபெறுவதை யெதுவும் தடுக்கமுடியாது.

ஜீவர்களின் ஏணி.

20வ குப்த மார்க்கத்தில் பிரவேசித்தவன், சிலர் செய்வதுபோல், ஈசுவரசங்கற்பத்திற்கு இணங்கி நடக்கும் மார்க்கத்திற்கும், அதற் கெதிரிடையாகச் செல்லும் மார்க்கத்திற்கும் மத்தியில் சஞ்சலப் பட்டுக்கொண் டிருக்கமுடியாது. மார்க்கத்தில் செல்வதற்கு அவன் அடைந்திருக்கும் அபிவிருத்திக் கிரமத்தில் அதை வெகு தூரத்திலேயே விட்டு விட்டான்.

தீக்ஷாமார்க்கம்.

21வ மேன்மார்க்கத்தைப் பார்த்தபின் கீழ்வழியிற் செல்ல வேண்டுமென்ற எண்ணம் உதிக்காது. அவன் பிசக மாட்டானென்று நான் சொல்லவில்லை; அவன் நிதானிப்பதில் தவற மாட்டானென்று சொல்லவில்லை; ஆனால் அவன்

எங்கே யதார்த்தத்தைப் பார்க்கிறானோ அதை நிச்சயமாய்ப் பின்பற்றிச் சென்றே தீருவான் என்பதே என் அபிப்பிராயம்.

### தீக்ஷா மார்க்கம்.

22வ. சன்மார்க்கத்தை அனுசரிப்பது; ஜீவன் முக்தர்களான குருநாதர்கள் அம்மார்க்கத்தைக் கடந்திருக்கிறார்களென்றும், நீயும் நானும் அவ்விதமே செய்யலாமென்றும் தெரிந்துகொள்வது; அதாவது மனிதன் ஈசுவரனாய் மாறும் ஸ்தானமாகிய மானிட வர்க்கத்தின் அந்த யதார்த்தமான உன்னத பதவியை அடைவது. உன்னுடைய யதார்த்த நிலைமை எவ்விதம் ஆகக்கூடும் என்று தெரிந்துகொள்வது; உலகத்தில் ஜன்ம மெடுத்ததின் கருத்தை இவ்விதமாய் நிறைவேற்றுவதுதான்.

### குருநாதர்களும் அவர்களை யடையு மார்க்கமும்.

23வ. சன்மார்க்கத்தில் நடப்பதற்கும் ஞானதீக்ஷை யடைவதற்கும் தேவையான குணங்கள் யாவை? எல்லாவற்றிற்கும் முதலாக, நித்திய அநித்தியம் இன்னவை என்றும், யதார்த்தம் மித்தை இன்னவை யென்றும், ஆத்மார்த்தம் உலக சம்பந்தமானவை இன்னவை யென்றும், உன்னைச் சுற்றியிருப்பவைகளிடமும் உன்னிடமும், வாழ்க்கையில் நேரிடும் சந்தர்ப்பங்களிலும், நீ தெரிந்தெடுக்கும் ஒவ்வொன்றிலும், உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ளும் சக்தியை விருத்தி செய்வதுதான்.

### குருநாதர்களும் அவர்களை யடையு மார்க்கமும்.

24வ. அந்தந்தக் காலத்தில் உள்ள மனித வர்க்கத்தில் சிஷ்யர்களை குருமார்கள் தேடுகையில், அன்பு நிறைந்த ஹிருதயத்தையே அவர்கள் கவனிக்கிறார்கள். மனித வர்க்கத்தின் சுயநலம் காட்டும் தன்மையான அந்தகாரத்திலும் அதன் போராட்டம் நிகழும் அக்ஞான இருளிலும் அந்த அன்புநிறைந்த ஹிருதயமே இருட்டில் பிரகாசிக்கும் தீபம் போல் ஒளி வீசுகின்றது. குருதேவன் அதைப்பார்த்து,



இனி சிஷ்யனாக வரப்போகிறவன் அதோ இருக்கிறானென்று தெரிந்துகொள்கிறார் ........ சன்மார்க்க முறையை அனுஷ்டிப்பதற்கு இந்த அன்பைத்தவிர வேறுவழியில்லை.

### குருநாதர்களும் அவர்களை யடையு மார்க்கமும்.

25வ. சன்மார்க்க முறையில் பிரவேசிக்க முயல்பவனின் லக்ஷணம் யாதெனக் கூறுகின்றேன். சுயநலமற்று பிறர்க்குக் கைங்கரியம் செய்வதில் தீவிரமான அவா வுள்ளவனாக விருப்பான். மற்றவர்களுடைய நன்மைக்காக தன்னுடைய எல்லா உடைமையையும் தியாகம் செய்வதில் சித்தனாயிருப்பான். உலகத்தார் அதிகமாய் மதிக்கும் எல்லாவற்றையும் தனக்கு நியாயமென்று தோன்றும் காரியத்தின் நிமித்தம் அர்ப்பணம் செய்யத் தயாராயிருப்பான்.

### குருநாதர்களும் அவர்களை யடையும் மார்க்கமும்.

26வ. இச்சன்மார்க்கத்தில் முதலில் அதன் லக்ஷியம் அல்லது எல்லையாவது என்னவெனில், முழு பிரக்ஞையுடனே ஈசுவரனுடன் கலத்தலேயாம். ஈசுவரனை ஸ்துதி பண்ணுதல் அல்லது ஈசுவரனுடன் கலக்க வேண்டுமென்ற அவாவுறுதல்மட்டும் போதாது. ஞானியானவன் ஓரோர் சமயம் மெய்ம்மறந்து இருக்கின்ற நிலைமைமாத்திரம் போதாது. ஆனால் பரமாத்ம ஸாக்ஷாத்காரம் என்ற அகண்டாகார விர்த்தியாகிய உயர்ந்த அனுபவம் வரும்வரை படிப்படியாய்த் தன் பிரக்ஞையானது மென்மேலும் அகன்று விரிந்துவர வேண்டியது.

### குருநாதர்களும் அவர்களை யடையும் மார்க்கமும்.

27வ. ஜீவன் முக்தரான குருநாதன் தெய்வத்தன்மை யடைந்த மனிதரே. ஓர் மூத்த சகோதரர் போன்றவர். மற்ற மனிதரைப்போல் அவரும் மனிதரேயாயினும் அவர் விகாசமுறையில் அடைந்திருக்கும் உன்னத பதவியினால் மூத்தவராவர். சன்மார்க்கத்தில் அவர் வெகுதூரம் நடைபெற்றவர். அநேக ஞானதீக்ஷைகள் பெற்றதினால் அவரு

டைய பிரக்ஞையானது அகன்றுளது. அதன் வரம்பில் இப்பூலோகம் மாத்திரமல்லாமல் ஆத்மா இயங்கும் எல்லா லோகங்களும் அடங்கியுள்ளன.

குருநாதர்களும் அவர்களை யடையுமார்க்கமும்.

28வ உனக்குள்ளே ஈசுவர அம்சமாகிற மொட்டு இருந்திராவிடில், நீ ஈசுவரனை ஆகும் புஷ்பமாக ஒருபொழுதும் பிரக்ஞை பூர்வமாக மலர முடியாது; ஆனால் ஒவ்வொருவனுடைய ஹிருதயத்திலும் ஈசுவரன் வசிப்பதால் அத்தகைய ஜீவப்ரம்ம ஐக்கியம் சாத்தியமாகிறது. சன்மார்க்கத்திற் செல்லவேண்டியதின் நோக்கமும், அச்சன்மார்க்கத்தின் முடிவும் ஈசுவரனுடன் பூரணப் பிரக்ஞையுடன் கலப்பதுதான்.

குருநாதர்களும் அவர்களை யடையுமார்க்கமும்.

29வ எவன், உலகத்தாரால் அதிகமாய் மதிக்கப்படும் எல்லா வஸ்துக்களையும், தன் ஹிருதயத்தை ஆகர்ஷித்து அதிற் குடிகொண்டுள்ள உயர்லக்ஷியத்திற்காகப் புரியும் ஸேவையுடன் ஒப்பிட்டுப்பார்க்க, அவைகள் பிரயோஜனமற்றவைகளென்று கருதுகிறானோ, அவன்தான் சன்மார்க்கத்தில் பிரவேசித்துக்கொண்டிருக்கிற மனிதன் என்று குறிப்பிடத் தகும்.

குருநாதர்களும் அவர்களையடையு மார்க்கமும்.

30வ நாவை அடக்குவது, சன்மார்க்கத்தை அனுசரிக்கப் பிரயத்தனப் படுகிறவனுக்கு மிகவும் முக்கியமானது; ஏனெனில் கொடூரமான அல்லது பக்ஷமற்ற வார்த்தையும், அவசரமுள்ள அல்லது பொறுமையற்ற சொற்களும் கைங்கரியத்திற்காக அர்ப்பணம் செய்யப்பட்ட நாவினின்றும் வெளிவரல் கூடாது. பகையாளிக்குங்கூட துன்பமுண்டுபண்ணக்கூடாது; ஏனெனில் அன்புமயமாய் விளங்கும் இராஜ்யத்தில் மனம் நோகும் வார்த்தைகள் நடைபெற இடமில்லை.

குருநாதர்களும் அவர்களை யடையுமார்க்கமும்.

210811

## ஆனந்த போதனி.

இது வோர் சிறந்த மாதப்பத்திரிகை. சுமார் இருபதினுயிரம் சந்தாதாரர்களையுடையது. இத்தனை சந்தாதாரர்களையுடைய பத்திரிகை தமிழ்நாட்டில் வேறு இல்லையென்று சொல்லலாம்.

இதன் வருஷ சந்தா ரூ. 1-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ். மதராஸ்.

## கிருஷிகன்.

இஃது, விவசாய அபிவிருத்தியையும் அதன் மூலமாய் தேசக்ஷேமத்தையும் கருதி வெளியிடப்பட்டுவரும் ஓர் மிக்க உபயோகமான மாதப்பத்திரிகை. இதன் ஆசிரியர்கள்: ராவ் பஹதூர் ஜெ. செல்வரங்கராஜு, பென்ஷன் விவசாய டெப்டி டைரக்டர் J. R. ரங்கராஜு. வருஷ சந்தா, ரூ. 1–0–0.

மானேஜர், "கிருஷிகன்" ஆபீஸ்.

"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை.

## நச்சினார்க்கினியன்.

இதில், தொடர்ச்சியாக வெளிவரும் நாவல்கள், நாடகங்கள் வியாசங்கள், மொழி பெயர்ப்புகள் இனிய கவிகள், விநோதக்கூற்றுகள், விடுகதை விஞக்கள் முதலிய பல சிறந்த விஷயங்கள் வெளிவருகின்றன. வருஷ சந்தா, ரூ. 2-0-0.

பண்டித: ம. கோபாலகிருஷ்ணய்யர்.

"நச்சினார்க்கினிய நிலயம்"

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

## கம்மபாலன்.

கோவில்பட்டி தக்ஷிணகம்ம மஹாஜன சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் ஓர் சிறந்த தமிழ் மாதாந்தப் பத்திரிகை. ஆசிரியர்: R. வெங்கடஸாமி நாயுடு. வருஷ சந்தா ரூ. 1-0-0.

மானேஜர் "கம்மபாலன்" ஆபீஸ்.

திருத்தங்கல், சாத்தூர்வழி.

## வைத்திய சந்திரிகை.

வைத்ய விஷயங்களைப் போதிக்கும் ஓர் உயர்ந்த மாதப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 2-0-0.

இதன் ஆசிரியர், பண்டித: S. நாராயண அய்யங்கார்.

"வைத்திய சந்திரிகை" ஆபீஸ், கரூர்.

---

## மாருதி.

இதில், சோதிட விஷயங்கள், வர்த்தகப் பகுதி, சுகவாழ்வு நீதிமஞ்சரி, வைத்தியக் குறிப்புகள், நாட்டுப்பாட்டு, தீண்டாமை முதலிய அரிய விஷயங்கள் வெளிவருகின்றன.

ஆசிரியர்;—சோதிட சாஸ்திரி. V. K. சடகோபாச்சாரியார்.

வருஷ சந்தா ரூ. 1—0—0 "மாருதி" காரியாலயம்.

தபாற் பெட்டி. நெ. 157, மதராஸ்.

---

## ஆரம்ப ஆசிரியன்.

சென்னை மாஹாண ஆரம்ப ஆசிரியர் மானேஜர்கள் சங்கத்தால் வெளியிடப்படும் சிறந்த மாதப்பத்திரிகை. ஆசிரிய:

M. ஷண்முகஸுந்தர முதலியார். M. A. L. T. வருஷ சந்தா ரூ. 1—0—0 "ஆரம்பாசிரியன்" ஆபீஸ்.

200. தம்புச் செட்டித்தெரு, சென்னை.

---

## கர்பகம்.

இதில், கல்வி, சாஸ்திரம் சுகாதாரம், கைத்தொழில் வேதாந்தம், இராஜாங்க ஜனங்கசீர் திருத்தங்கள், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள் ஆகிய பல அரிய விஷயங்கள் வெளிவருகின்றன. வருஷ சந்தா ரூ. 1—0—0

மானேஜர் "கற்பகம்" ஆபீஸ், புதுச்சேரி,

---

## தொழிற் கல்வி.

நம் நாட்டிற்கு இன்றியமையாத தொழிற் கல்வியைப் புகட்டும் ஓர் சிறந்த மாதாந்தப் பத்திரிகை. ஆசிரியர்: அ. ராமஸ்வாமி அய்யர் மெக்கானிகல் இஞ்சினியர். திருவிடைமருதூர் வருஷ சந்தா. ரூ. 4—0—0 தொழிற் கல்வி ஆபீஸ், திருவிடைமருதூர்.

---

## ஆனந்த குணபோதினி.

இஃது, படிப்பவர்களுக்கு நன்னடக்கையும், லௌகீக யுக்தியும் பாஷாஞான சுதேச சிந்தனையும், ஈசுவரபக்தியும், ஆத்ம சிந்தனையும் உண்டாகக்கூடிய விதமாய் சொல்நயம் பொருள்நயம் [illegible]ழுதப்பட்டு வரும் ஓர் உயர்ந்த மாதாந்த பத்திரிகை.

[illegible]ம், எஸ். ஜி. இராமானுஜலு வருஷ